30/12/19

## நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்

திரு.S.தனராசு, பி.இ.,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருச்சிராப்பள்ளி மண்டலம்,
காஜாமலை மெயின் ரோடு,
காஜாமலை,
திருச்சிராப்பள்ளி–23.
E.mail : ad.try.region@gmail.com
Web : tn.gov.in/dtcp

பெறுநர்

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.

---

ந.க. எண் : 87/2019திம2,

நாள் : .12.2019

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் – கரூர் மாவட்டம் – புகளூர் வட்டம் – க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம் – புன்னம் கிராமம் – புல எண்கள். 878/1A1B, 885/1B1B–ல் 3.08 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு – தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :-

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆ5/2997/18, நாள்.03.09.2019.
2. மனுதாரர் திரு. R. விஜயகுமார் அவர்களது இணையதள விண்ணப்பம் நாள். 02.09.2019
3. இவ்வலுவலகக் கடிதம் இதே எண் நாள்.24.10.2019 மற்றும் 18.12.2019
4. தலைவர்/மாவட்ட ஆட்சித் தலைவர் காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் தீர்மானம் எண் 18, நாள்.18.11.2019
5. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள்.16.6.2003.
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.26294/2010எல்ஏ2 நாள்.20.12.2010.
7. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7978/2012எல்ஏ2 நாள்.19.4.2012.
8. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.10433/2012எல்ஏ2 நாள்.22.6.2012.
9. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.6,2004.
10. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.

-----

மேற்காண் பொருள் தொடர்பாக, பார்வை 1–ல் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

உத்தேசக் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் **ம.வ/கா.பு.ந.வ.கு.எண்.08/2019** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

த.பி.பா.

Scanned by CamScanner

மேலும் கீழ்கண்டுள்ள நிபந்தனையை நிறைவு செய்யப்பட்ட பின்னரே மனைப்பிரிவில் மனைகள் விற்பனை செய்யப்பட வேண்டும்.

"The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Esate Regulartory Authority".

மேலும், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், அவர்களால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை 19(இ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

புஞ்சை க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம் ஒப்புதலுடன், அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. உள்ளாட்சியால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னரே மனைப்பிரிவில் எந்தவித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்படி உத்தேசக் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைபடம் மற்றும் நிபந்தனைகள் இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகளுடன் பெறப்பட்டமைக்கு ஒப்புகைச் சான்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், அவர்களை அணுகுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

26/12/19

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
திருச்சிராப்பள்ளி மண்டலம்.

26/12/19 26/12/19

இணைப்பு:-

வரைபடம் மற்றும் நிபந்தனைகள் 2 –தொகுப்புகள்.

நகல்:-

திரு. R. விஜயகுமார்,
த/பெ. ராஜேந்திரன்,
எண்.226, ரமானுஜம் நகர் தெரு தெற்கு,
கரூர் டவுன்,
கரூர் மாவட்டம் – 639 001.

Scanned by CamScanner

**தனி அலுவலர், புன்னம் ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம் க.பரமத்தி அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை – திருமதி.என்.ஜெயந்திராணி**

ந.க.ஆ5 / 2997/ 2018

நாள். 31.12. 2019.

பொருள் – மனைப்பிரிவு அனுமதி – கரூர் மாவட்டம் – க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம் – புன்னம் கிராமம் – சர்வே எண். 878/1A1B மற்றும் 885/1B1B–ல் 3.08 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்திரவிடல் – தொடர்பாக.

பார்வை –
1). வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆ5/2997/18, நாள்.03.09.2019.
2). புன்னம் ஊராட்சி மன்ற தீர்மான எண்.152/2019 நாள்.04.11.2019.
3). நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.87/2019திம2, நாள்.26.12.2019.
4). மனுதாரர் திரு.ஆர்.விஜயகுமார், ராமனுஜம் நகர், கரூர்.
5). நன்கொடை பத்திர பதிவு ஆவண எண்.9137 /2019 நாள்.13.11.2019.

---------

**உத்தரவு**

கரூர் மாவட்டம் , அரவக்குறிச்சி வட்டம், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், புன்னம் கிராமம் புல எண். 878/1A1B மற்றும் 885/1B1B –ல் கட்டுப்பட்ட 3.08 ஏக்கர் பரப்பு கொண்ட இடத்தில் அமையும் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி பார்வை 1–ல் காணும் விண்ணபத்தின் படி, திருச்சிராப்பள்ளி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், திருச்சி மண்டலம் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. பார்வை 2–ல் காணும் விவரப்படி இம்மனைப்பிரிவை அங்கீகரித்து புன்னம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.152/2019, நாள்.04.11.2019–ன் படி தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. பார்வை 3–ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், 26.12.2019–ந்தேதிய கடிதத்தின்படி, மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திக்கு உரிய நிபந்தனைகளுடன் ம.வ/ கா.பு.ந.வ.டு எண்.08/2019 நாள். 26.12.2019. என தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர், மனை அளவுகளை பிரித்தும், சாலைகள் அமைத்தும் அடிப்படை வசதிகள் மேற்கொண்டுள்ளார்.

\\System5\d\2019 Files\B2 (SBM)\Layout\Land Proc.docx

கா.பு.ந.வ.டு

Scanned by CamScanner

மேலும், மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.17,256/– (ரூபாய் பதினேழாயிரத்து இருநூற்று ஐம்பத்து ஆறு மட்டும்)–ஐ புன்னம் ஊராட்சி பலவகை வரவு ரசீது (ரசீது எண்.7853 நாள்.31.12.2019) மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், நிபந்தனையின்படி புன்னம் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவேண்டிய பொது இடங்களை பார்வை 5–ல் காணும் மேலக்கரூர் சார்பதிவக புத்தக ஆவணம் எண்.9137/2019 நாள்.13.11.2019–ன் படி புன்னம் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையிலும் திருச்சி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களது தொழில் நுட்ப ஒப்புதல் அடிப்படையிலும் புன்னம் ஊராட்சி சர்வே எண்.878/1A1B மற்றும் 885/1B1B-ல் ஏக்கர் 3.08 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கு, நிபந்தனையின் அடிப்படையிலும், நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குனரது நிபந்தனைகள் ஏதேனும் விடுப்பட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும். தொகை செலுத்தாமல் விடுபட்டிருப்பின் அதனை எப்பொழுது கோரும் பொழுதும் செலுத்திட தயாராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலும் மேற்படி, மனைப்பிரிவக்கு ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

ஒ. [signature] 31/12/19.
தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
புன்னம் ஊராட்சி,
க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம்.

த.ப
30.12.19

**பெறுதல்**

திரு. ஆர். விஜயகுமார்
த/பெ ராஜேந்திரன்,
எண்.226, ராமனுஜம் நகர் தெரு தெற்கு,
கரூர் டவுன்,
கரூர் மாவட்டம்–639 001.

**நகல்**

உதவி இயக்குநர்,
நகர் ஊரமைப்புத்துறை காஜாமலை திருச்சிராப்பள்ளி மண்டலம்.
திருச்சிராப்பள்ளி.

Scanned by CamScanner